**ALAGAPPA UNIVERSITY**
(Reaccredited with ‘A’ Grade by NAAC)
**KARAIKUDI**

---

Date : 17.03.2017

# Two-day Job Fiesta for Freshers’ Placement (FLAG 2K17)

A two-day Job Fiesta for Freshers’ Placement (FLAG 2K17) was inaugurated today (17.3.2017) at Alagappa University, under the auspices of the Placement Cell.




Presiding over the inaugural ceremony of the event, Prof. S. Subbiah, Vice-Chancellor, Alagappa University, said that 12 reputed companies are participating in it. He also explained the career guidance measures initiated by the Placement Cell for the benefit of the students. He underscored the need for student centricity in all the endeavours of the University by reiterating that all employees of the University must focus only on students’ welfare and help them achieve their goals. He also released the Placement Brochure which depicts the core competencies of the University in terms of teaching, research and extension activities. Online Students’ Data Base of the University was also launched by him on this occasion.

Dr. K. Meena, Former Vice-Chancellor of Bharathidasan University, Thiruchirappalli, declared open the newly established ultramodern Placement Centre; and she pointed out that placement drives of this nature is an ideal move towards creating a strong University-Industry interaction. She appreciated the Placement Cell of the University for bringing out a Placement Brochure which is perhaps the first among the State Universities to do so in this region. She

stressed the need for acquiring soft skills which is very essential for gaining good job opportunities in the current employment situation and advised the students to get more and more exposure beyond the class room to win in the competitive era.




Mr. Manikandan Thangarathinam, Director, Engineering, Amazon, in his keynote address, expounded the dynamic e-commerce landscape in India and highlighted the job prospects in the present scenario driven by technology and innovation. Disruptive Innovations and Start-up India Campaign are throwing open fertile entrepreneurial opportunities too, he added.

Mr. Venkatesh Balasubramanian, Chief Happiness Officer, Vara Ltd, Mumbai and Mr. D. Giridhar, Calibre Connections, Chennai, pinpointed the increasing responsibilities of the students and the faculty to enhance scope of employability.

Mr.Ambalavanan Ramachandran, Chief of the Employability Bridge, offered felicitations. Dr. K. Uthayasurian, welcomed the gathering.

In this two-day mega event, around 1000 students from the University and affiliated colleges would be participating.

Prof. V. Balachandran
Registrar i/c.

## அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தரநிர்ணயக் குழுவின் மறு தரம திப்பீட்டிலும் "ஏ" தகுதி பெற்றது)

நாள் : 17.3.2017

அழகப்பா பல்கலைக்கழக வேலை வாய்ப்பு குழுமம் First Look @ Aspiring Graduate – A JOB FIESTA 2017என்ற இருநாள் வேலை வாய்ப்பு முகாமை மார்ச் 17 மற்றும் 18-ம் தேதிகளில் பல்கலைக்கழக மேலாண்மை வளாகத்தில் நடத்திவருகிறது.




இந்நிகழ்ச்சியின் தொடக்க விழாவில், அழகப்பா பல்கலைக்கழக வேலை வாய்ப்புக் குழுமத்தின் வேலைவாய்ப்பு மலரை வெளியிட்டு, துணைவேந்தர் பேராசியர் சொ.சுப்பையா தனது தலைமையுரையில், பல்கலைக்கழக வேலைவாய்ப்புக் குழுமத்தின் ஏற்பாடுகளை பாராட்டியதோடு, இந்த முகாமில் 12 முன்னோடி கார்ப்பரேட் நிறுவனங்கள் பங்கேற்பதாகவும், இந்த முயற்சி பல்கலைக்கழகத்தின் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பை உருவாக்கும் என்றும் கூறினார். இக்குழுமம் செய்யும் வேலைவாய்ப்பு தொடர்பான வழிகாட்டும் முயற்சிகளைபற்றி விளக்கினார். பல்கலைக்கழகமும் அதன் பணியாளர்களர்களும் தமது அனைத்து செயல்களையும் மாணவர்கள் நலநன கருத்தில் கொண்டும், அவர்களை உற்சாகப் படுத்தும் விதத்தில் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வெளியிடப்பட்டிருக்கும் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு மலர் பல்கலையின் தனித்துவ ஆற்றல்களான கற்பித்தல், ஆய்வு மற்றும் சமூகம்சார்ந்த விரிவாக்கப் பணிகள் குறித்த செய்திகளை உள்ளடக்கியிருப்பதாகக் கூறினார். பல்கலைக்கழக முதுகலை இறுதியாண்டு மாணவர்களின் சுய விபரக் குறிப்புகள் அடங்கிய இணையதள தகவல் கருவூலத்தையும் வெளியிட்டார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் கே.மீனா, அதி நவீன முறையில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக வேலைவாய்ப்புமையத்தை திறந்துவைத்துப்

பேசுகையில், இவ்வித வேலைவாய்ப்பு முயற்சிகள் பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்துறை நல்லுறவை வளர்க்கும் கருவியாகும் என்று கூறினார். தமிழகத்தில் அழகப்பாபல்கலைக்கழகமே அரசுப் பல்கலைக்கழங்களின் முன்னோடியாக இத்தகு வேலைவாய்ப்பு மலரைக் வெளியிட்டிருப்பதைப் பாராட்டினார். மாணவர்கள் மென்திறன்களை அவசியம் வளர்த்துக் கொண்டு வகுப்பறைக்கு அப்பாற்பட்ட பல பொது அறிவுசார் தகவல்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அமேசான் நிறுவனத்தின் பொறியியல் இயக்குநர் திரு.மணிகண்டன் தங்கரெத்தினம் தனது முக்கிய உரையில், தற்காலத்தின் புதியதொழில்நுட்பமும், கண்டுபிடிப்புகளும் பலவேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்தார். வூரா நிறுவனத்தின் முக்கிய மகிழ்ச்சி அதிகாரி திரு.வெங்கடேஷ் பாலசுப்பிரமணியன் மற்றும் திரு.டி.கிரிதர், பங்குதாரர், கேலிபர் கனெக்சன்ஸ், சென்னை, பேசுகையில் மாணவர்கள் வேலைவாய்ப்பை பெறும் திறன்களை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

எம்ப்ளாயபிலிட்டிபிரிட்ஜ் நிறுவனத்தின் முக்கிய செயல் அதிகாரி திரு.அம்பலவாணன் ராமச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். வேலை வாய்ப்பு குழுமத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே. உதயசூரியன் வரவேற்றார்.




இந்த இரு நாள் பெரு முகாமில் அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளின் ஆயிரம் மாணவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் முகாமில் பிரபலமான 12 நிறுவனங்கள் 600-க்கும் மேற்பட்ட பணி வாய்ப்புகளை வழங்குகின்றன.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)